# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு 2004-2005**

**மானியக் கோரிக்கை எண்.14**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**4.1.** தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1982-இல் அமைக்கப் பட்டு, மாசு தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிற்காக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977, திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 ஆகியவற்றையும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-இன் உரிய அம்சங்கள் மற்றும் விதிகளையும் செயல்படுத்தி வருகிறது. மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிகள் பின்வருமாறு,

- 1978 மற்றும் 1988-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
- 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.
- 1991 மற்றும் 2003-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1977-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்.
- 1992-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1978-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி விதிகள்.
- 1987-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1981-ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
- 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.
- 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.
- 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள்.
- 2000 மற்றும் 2003-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1989-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

- 2000-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1989-ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.
- 2000 மற்றும் 2003-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட, 1998-ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.
- 2003-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட, 1999-ஆம் ஆண்டு மறுசுழற்சி பிளாஸ்டிக் தயாரிப்பு மற்றும் பயன்பாடு விதிகள்.
- 2000-ஆம் ஆண்டு ஒலி மாசு (சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.
- 2001-ஆம் ஆண்டு மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் மணலி ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் மற்றும் தூத்துக்குடியில் ஒரு நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

### 4.2. மற்ற நிறுவனங்களுடனான தொடர்பு

வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக, தொடர்புடைய பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்கிறது. வாரியம், நகர திடக்கழிவு மேலாண்மைக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பயிற்சி மற்றும் தொழில் நுட்ப உதவியினை அளித்து உதவி வருகிறது.

### 4.3. தொழிற்சாலை மாசு கண்காணிப்பு

தமிழ்நாட்டில் வேகமாக பெருகிவரும் தொழிற்சாலை மயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வரும் மாசினை தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெருகிறது. அனைத்து தொழிற்சாலைகளும், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்கு தேவையான மாசு தடுப்பு சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலைகளையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து செய்முறைக்கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின்

செயல்திறனை கண்காணித்து வருகின்றனர். வாரியம், தொழிற்சாலைகளை சீரியமுறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளது.

### 4.4. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை

வாரியம், கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் வெளியேற்றப்படும் புகையின் தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளைத் துவக்குவதற்குமுன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப் பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலை உற்பத்தியை துவங்கும் முன், தொழிற் சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப் படுகிறது. வாரியம், இசைவாணை வழங்கும்போது தொழிற்சாலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது. தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படும் இசைவாணை, வாயுக்கழிவுகள் மற்றும் கழிவுகளுக்கான அடிப்படை நிபந்தனைகளுடன், ஐ.எஸ்.ஓ.14001 சான்றிதழ் (சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு), பசுமைப்பகுதி வளர்ச்சி, மழைநீர் சேமிப்பு வசதிகள், அரசு சுகாதார அமைப்புகளை பராமரித்தல், வாகன பராமரிப்பு மற்றும் பொறுப்பான வாகன ஒப்பந்தம், வீசியெறியும் பிளாஸ்டிக்கின் உபயோகம் இல்லாத சிறந்த நிறுவன பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிபந்தனைகளையும் கொண்டுள்ளது.

1994-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை, இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 வகை தொழிற்சாலைகள் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினை பெறவேண்டும். 10.04.1997-இல் வெளியிடப்பட்டுள்ள 1994-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைக்கான திருத்தத்தின்படி, அவ்வகையான திட்டங்களுக்கு பொது மக்கள் கருத்தினைப் பெற பொது மக்கள் கேட்புக் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற் சாலைகள்/திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கான பொது மக்களின் கருத்துக்களைக் கேட்பதற்கான கூட்டங்கள் 1998-ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. 31.03.2004 வரை 242 பொது மக்களின் கருத்துக்ளை கேட்பதற்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பொது மக்கள் கேட்புக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டவுடன் வாரியம், அதனை ஆராய்ந்த பின்னர் அந்த தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். வாரியத்தின்

தடையில்லா சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையுடன் தொழில் முனைவோர், சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தினை அணுகவேண்டும். இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி சமர்ப்பிக்கப் பட்டவுடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வாரியத்தால் வழங்கப்படுகிறது.

வாரியம், 1995-1996-ஆம் ஆண்டு முதல் 31.03.2004 வரை 4,132 இசைவாணைகளை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நீர்ச் சட்டத்தின் கீழும், 4,068 இசைவாணைகளை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு காற்றுச் சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது. வாரியம், 1982-1983-ஆம் ஆண்டு முதல் 31.03.2004 வரை 21,659 இசைவாணைகளை தொழிற்சாலைகள் இயங்குவதற்கு நீர்ச் சட்டத்தின் கீழும், 18,829 இசைவாணைகளை தொழிற்சாலைகள் இயங்குவதற்கு காற்று சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது.

### 4.5. புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

31.03.2004 வரை, வாரியம் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு 28,793 முகாந்திர விளக்கம் கோரும் கடிதங்களையும் 4,279 மூடுதல் ஆணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது. மாசு தடுப்புச் சட்டத்தினை மீறிய தொழிற்சாலைகளுக்கு எதிராக திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-இன் கீழ் 321 வழக்குகளையும், திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-இன் கீழ் 134 வழக்குகளையும் வாரியம் பதிவு செய்துள்ளது.

### 4.6. 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை கண்காணிக்கும் பொருட்டு ஒரு சிறப்பு கண்காணிப்பு பிரிவினை சென்னை தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின் கீழ், 190 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

### 4.7. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகள் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது. இது வரை 50 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக்கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 33 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. மேலும் 17 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள் அமைக்கும் பணிகள் பல்வேறு

நிலைகளில் உள்ளன. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விபரங்கள் பின்வருமாறு :

| வ. எண் | வகை | உருவாக்கப்பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 24 திட்டங்கள் | 14 திட்டங்கள் |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 25 திட்டங்கள் | 18 திட்டங்கள் |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1 திட்டம் | 1 திட்டம் |
| | **மொத்தம்** | **50 திட்டங்கள்** | **33 திட்டங்கள்** |

மேற்கண்ட திட்டங்களில், பம்மல், சிட்கோ-ராணிப்பேட்டை, சிப்காட் பகுதி-2-ராணிப்பேட்டை, வாணியம்பாடி (வளையம்பட்டு), வாணியம்பாடி (உதயேந்திரம்), ராணிப்பேட்டை (வி.சி.மோட்டூர்), ராணிப்பேட்டை (மேல்புதுப்பேட்டை), ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைதோப்பு), பேரணாம்பட்டு (பகாளப்பள்ளி), மேல்விசாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜிநகர்) ஆகிய 14 இடங்களில் 624 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம், குன்னங்கல் பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம்புதூர், கரூர் பகுதியில் கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர், சுக்காலியூர், இராமகிருஷ்ணாபுரம், கலங்கரை விளக்கு பகுதி, செல்லாண்டிப்பாளையம் மற்றும் ஆண்டான்கோயில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அய்யம்பேட்டை-முத்தையால்பேட்டை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை ஆகிய 18 இடங்களில் 817 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் துவக்கப்பட்டுள்ளன.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மாநில அரசு மானியமாக வழங்குகிறது. இந்திய அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மைய அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைக்கப்படுவதின் முன்னேற்றத்தின் அடிப்படையில், அரசிடமிருந்து பெறும் மானியத் தொகையினை ஒவ்வொரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் வாரியம் வழங்குகிறது.

வாரியம், இதுவரை 48 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக தமிழக அரசிடமிருந்து ரூபாய் 25.90 கோடி, மானியத்தொகையினை பெற்று, அதில் 31.03.2003 வரை ரூபாய் 22.66 கோடி மானியத்தொகையினை வழங்கியுள்ளது. 2003-2004-இல் மாநில அரசு மானியத்தொகையாக ரூபாய் 28.83 இலட்சம் வழங்கப் பட்டது. தமிழக அரசு தமிழ்நாடு தோல் மேம்பாட்டு கழகம் மூலமாக மேலும் 9 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 6.77 கோடி மானியத்தொகையினை தமிழக அரசு மானியமாக திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை வழங்கியுள்ளது.

இந்திய அரசு இதுவரை ரூபாய் 20.60 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 48 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. இந்திய அரசு, இம்மானியத்தொகையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு தோல் மேம்பாட்டு கழகம் மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாக வழங்கியுள்ளது. வாரியம், இதுவரை ரூபாய் 12.84 கோடியினை மைய அரசு மானியத்தொகையாகப் பெற்று அதில் ரூபாய் 11.65 கோடியினை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு, இதுவரை ரூபாய் 4.29 கோடியினை தமிழ்நாடு தோல் மேம்பாட்டு கழகம் மூலமாகவும், ரூபாய் 3.47 கோடியினை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மூலமாகவும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ள ரூபாய் 20.60 கோடி மானியத்தொகையில் இதுவரை ரூபாய் 19.40 கோடி மானியத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 4.8. தூய்மையான தொழில் நுட்பங்கள்

வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், காஸ்டிக் சோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற் சாலைகளில் காற்று மாசினை குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினை பின்பற்றுதல், 'இருமுறை மாற்றும் மற்றும் இருமுறை உட்கிரகிக்கும்' தொழில்நுட்பத்தை கந்தக அமிலம் தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுத்துதல், சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்ப கடினபடுத்துதலுக்கு பின்பற்றுதல் மற்றும் சயனைடு அற்ற முலாம் பூசுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. காகிதத் தொழிற் சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ-குளோரைட்ஸ் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற் சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு மாறி வருகின்றன.

சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக பெருந்துறையில் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மொத்த கரைந்துள்ள திடப்பொருள்கள் அதிகமுள்ள (2,100 மி.கி./லிட்டர்-க்கு அதிகமுள்ள) கழிவுநீரை, தானாகவே

மாற்றியனுப்பி, பிரித்தெடுக்கப் பட்ட சாயத்தொட்டி கழிவுநீருடன் சேர்த்து ஆவியாக்கும் வகையில், மொத்த கரைந்துள்ள திடப்பொருள்களை கண்காணிக்கும் கருவியினை கழிவுநீரோட்டத்திலேயே பொருத்தியுள்ளது.

தொழிற்சாலைகளில் சிறந்த சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகளை பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினைப் பெற பெரிய தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் 102 தொழிற்சாலைகள் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினை பெற்றுள்ளன. 83 தொழிற்சாலைகள் இச்சான்றிதழ்களைப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## 4.9. கழிவுகள் குறைப்பு

தூய்மையான தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதனால், கழிவுகளிலிருந்து பொருட்களை மீட்பதிலும், கழிவுகளை குறைப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, தோல் பதனிடும் தொழிற்சாலை கழிவுநீரிலிருந்து குரோமியமும், உர தொழிற்சாலைகளிலிருந்து அமோனியாவும் மீட்பு செய்யப்படுகின்றன. செய்முறை கழிவுநீர் வெளியேற்றாத நிலையினை அடைவதற்காக, 15 எரிசாராயதொழிற்சாலைகளில், 13 எரிசாராய தொழிற்சாலைகள், அவற்றின் கழிவுநீரை சர்க்கரை ஆலை கழிவு மண்ணுடன் சேர்த்து உயிர் உரமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. இரண்டு எரிசாராய தொழிற்சாலைகள் தற்போது இயக்கத்தில் இல்லை. திருப்பூரில் 12 சாயப்பட்டறை தொழிற்சாலைகள் செய்முறையில் கழிவுநீரை மறு உபயோகம் செய்வதற்காகவும் அதில் மீட்கப்பட்டுள்ள உப்பினை மறு உபயோகம் செய்யவும் எதிர்மறை சவ்வூடு மற்றும் உப்பு மீட்பு அமைப்புகளை நிறுவியுள்ளது.

## 4.10. நீர் பாதுகாப்பு

நீர் பாதுகாப்பு முறையாக, மணலி மற்றும் பேசின்பிரிட்ஜ் பகுதியில் உள்ள மூன்று பெரிய தொழிற்சாலைகள், நாளொன்றுக்கு சுமார் 25 மில்லியன் லிட்டர் நகர கழிவுநீரை மூன்றாம் கட்ட சுத்திகரிப்பிற்குப் பிறகு குளிரூட்டும் தேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றன. மணலியில் உள்ள பெரிய பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம், திருப்பூரில் 12 சாயப்பட்டறை தொழிற்சாலைகள் மற்றும் ஆம்பூரில் 2 தோல் தொழிற்சாலைகள் கழிவுநீரிலிருந்து செய்முறைக்குத் தேவையான நீரை மீட்சி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு நிலையங்களை அமைத்துள்ளன. மீட்சி செய்யப்பட்ட நீர் செய்முறைக்கு மறு உபயோகம் செய்யப்படுகிறது. சர்க்கரை தொழிற் சாலைகளில், ஆவியாக்கும் நிலையத்திலிருந்து திரவமாக்கப்பட்ட நீர் மறு உபயோகம் செய்யப்படுகிறது.

## 4.11. எரிசக்தி சேமிப்பு

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் மீட்சி செய்வதற்கான வழிமுறையாக, அனைத்து எரிசாராய தொழிற்சாலைகளும் தமது இறுதி கழிவிலிருந்து காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன்

வாயுவை மீட்சி செய்கின்றன. பெரிய சர்க்கரை தொழிற்சாலைகள் உற்பத்தியுடனான மின்நிலையங்களை அமைத்துள்ளன. சவ்வரிசி தொழிற்சாலைகள், தமது செய்முறை கழிவுநீரிலிருந்து, காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. மேல்விஷாரத்தில் உள்ள ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை தோல் பதனிடுவதிலிருந்து வரும் திடக்கழிவுகளை காற்றிலி தொட்டியின் மூலம் சுத்திகரிக்கப்படுவதிலிருந்து பெறப்படும் மீத்தேனைக்கொண்டு மின்உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. பிற தொழிற்சாலைகள், குறைந்த எரிசக்தியினை உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இது, அத்தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் அறிக்கையின் வாயிலாக தணிக்கை செய்யப்படுகின்றது.

### 4.12. காற்றுத் தன்மை கண்காணிப்பு

பெருநகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் காரணமாக தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக்கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை பாதிப்படைகிறது. காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.13. சுற்றுப்புற காற்றுத் தன்மை கண்காணிப்பு

தேசிய சுற்றுப்புற காற்றுத்தரக் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தன்மையை வாரியம் கண்காணித்து வருகின்றது. மாநில சுற்றுப்புற காற்றுத் தர கண்காணிப்பு திட்டத்தின் கீழ் வாரியம், சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புற காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்கள் சுற்றுப்புற காற்றின் தன்மையினை நகரங்களின் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப்பகுதிகளில் கண்காணிக்கின்றன. இந்த கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத்தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் முன்னோடி நாளிதழ்களில் வெளியிடப் படுகின்றன.

முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயன தொழிற்சாலைப் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், 6 தொடர் காற்று தரக்கண்காணிப்பு நிலையங்களை தலா ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி-திருவள்ளூர், இராயபுரம்-சென்னை மற்றும் கத்திவாக்கம்-திருவள்ளூர் ஆகிய இடங்களில் சுற்றுப்புற காற்றில் உள்ள மாசு பொருட்களான மிதக்கும் துகள்கள், கரியமில வாயு, நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, அமோனியா, குளோரின், ப்ளூரின் முதலியனவற்றை மதிப்பிடவும், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வதற்காகவும் அமைத்துள்ளது.

மேலும் நிர்ணயித்த தரத்தினை விட மாசு அதிகமாகும்போது காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்த வாரியம் தொழிற்சாலையினை அறிவுறுத்தி வருகின்றது.

காற்றுத்தர கண்காணிப்பினை பலப்படுத்துவதற்காக நடப்பாண்டில் சென்னை மாநகர், கோயம்பேட்டில் தானியங்கி தொடர் காற்றுத்தர கண்காணிப்பு நிலையம் நிறுவதல், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் புதிய காற்று மாதிரி சேகரிக்கும் கருவிகளை மொத்தம் ரூபாய் 72 இலட்சத்தில் அமைத்தல் மற்றும் வாரியத்தின் ஆய்வகங்களுக்கு ரூபாய் 39 இலட்சம் மொத்த மதிப்பில் புகைப்போக்கி வாயுவை அளவிடும் கருவிகளை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அவற்றிற்கான தொடர் காற்று தரக்கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆதாரத்திலேயே வாயுக்கழிவுகளை கண்காணிக்கும் வகையில் கணினி பதிவு வசதி கொண்ட தொடர் புகைபோக்கி கண்காணிப்பு நிலையங்களை அமைக்கவும் இத்தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தகைய காற்று தரக்கண்காணிப்பு அமைப்புகளை 42 தொழிற்சாலைகள் நிறுவியுள்ளன. இத்தகைய அமைப்புகள் மூலமாக தொழிற் சாலைகளின் சுய கண்காணிப்பு ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.14. வாகனப் புகை கண்காணிப்பு

நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப்போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் கழிவுகளும் அபாயகரமான வாயுக்கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப்புகை சோதனை செய்யும் மையங்கள் சென்னை மாநகரில் ஆலந்தூர், அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில் வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு, 1992-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இதனைத்தவிர 120 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப்புகையினை சோதனை செய்ய போக்கு வரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் வாரியம் திண்டுக்கல், பழனி, உதகமண்டலம் (2 இடங்கள்) மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வாகனப்புகை கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. வாரியம், டீசல் வாகனங்களை சோதனை செய்ய, தனது வாகனப்புகை கண்காணிப்பு மையங்களை மேம்படுத்தி கணினிமயமாக்கியுள்ளது. பெட்ரோல் வாகனங்களை சோதனை செய்ய கணினிமயமாக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

2003-2004-ஆம் ஆண்டில் 51,398 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 13,206 வாகனங்கள் அவற்றின் முதல் ஆய்வில், நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குட்படாமல் இருப்பது கண்டறியப் பட்டது. அவற்றில் 1,666 வாகனங்கள் குறைகள் சீரமைப்பு செய்யப்பட்ட பிறகும் தரத்திற்குட்படவில்லை. சென்னை பெருநகர போக்குவரத்து கழகத்தின் வாகனங்களின்

புகை அளவிற்கான சோதனையினை மேற்கொள்ள வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. கணினி மயமாக்கப்பட்ட புகை அளவீடு செய்யும் சோதனை மையங்கள் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் ஆலந்துார், அடையாறு, அயனாவரம், அண்ணாநகர், வடபழனி மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய பனிமனைகளில் வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. பிற போக்குவரத்து கழகங்களும் அவற்றின் பேருந்துகளின் புகை அளவினை கூர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகளும் பிறர்க்கு உதாரணமாக விளங்கும் வகையில் அவற்றின் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட புகை அளவு கட்டுப்பாட்டினை மீறவில்லை என்பதனை உறுதி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனப் புகையினை கட்டுப்படுத்த, காரீயம் இல்லாத மற்றும் 3 சதவீத பென்சின் அளவு உள்ள பெட்ரோல், மற்றும் குறைந்த சல்பர் (0.05 சதவீதம்) உள்ள எரிபொருள் போன்ற தூய்மையான எரிபொருளினை சென்னை பெருநகர் பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பாரத் நிலை-II தரத்தினை பூர்த்தி செய்யும் பயணிகள் கார்கள் மட்டுமே ஜுலை 2001-லிருந்து சென்னையில் பதிவு செய்யப் படுகின்றன. தூய எரிபொருளான திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவினை சென்னையில் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. கோயம்பேடு, கிண்டி, ஆவடி, முகைப்பேர், கீழ்ப்பாக்கம் மற்றும் அம்பத்தூர் ஆகிய 7 இடங்களில் திரவமாக்கப் பட்ட பெட்ரோலிய வாயு நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன. பொது போக்குவரத்தினை ஊக்கப்படுத்துதல் மற்றும் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவினை தனியார் வாகனங்கள் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றிற்கான அரசின் கொள்கை காற்று தரத்தினை மேம்படுத்த உதவும்.

சென்னை நகரில் காற்று தரத்தை மேம்படுத்த உருவாக்கப் பட்டுள்ள செயல் திட்டத்தினை செயல்படுத்துவதில் வாரியம் உதவி வருகிறது. செயல் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முறையான அறிக்கைகள், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் மூலம், மாண்புமிகு இந்திய உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

### 4.15. ஒலி மாசு அளவு கண்காணிப்பு

நகர் பகுதிகளில் ஒலி மாசினை கட்டுப்படுத்தும் வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து சுமார் 44,500-க்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன. 29 மாவட்டங்கள் காற்று ஒலிப்பானற்ற மாவட்டங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன. சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம், காற்று ஒலிப்பான்கள் அற்ற போக்குவரத்து கழகமாக அறிவிக்கப்பட்டதில் முதன்மையானதாகும். பிற போக்குவரத்து கழகங்கள் இதனை பின்பற்றியுள்ளன. மாவட்ட அளவில் ஒலி மாசினை

கண்காணிக்க ஒலி அளவீடுமானிகள் ரூபாய் 88 இலட்சம் மதிப்பில் வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 4.16. நீரின் தன்மை கண்காணிப்பு

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவுநீராலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீராலும் ஆறுகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக சேகரித்து ஆறுகளின் தரத்தினை கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் வெளியேற்றப் படும் கழிவுநீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் காவிரி ஆற்றில் திருச்சிராப்பள்ளி, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரப்பாளையம் ஆகிய இடங்களில் மற்றும் வைகை ஆற்றில் மதுரையில் மாசு தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிற நதிகள் மற்றும் நீர் ஆதாரங்களுக்கும் தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாசு தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

### 4.17. நீரின் தரக்கண்காணிப்பு

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றிலும் மற்றும் ஆற்று படுகையிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணித்து வருகிறது. இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் காவிரி (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய 3 முக்கிய ஏரிகள் ஆகியன வாரியத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் செய்முறை கழிவுநீர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் நகரக் கழிவுநீர் ஆகியவற்றால் ஏற்படும் மாசினைத் தடுக்கும் வகையில் சென்னை நகர நீர்வழிகளை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. சென்னை நகர நீர்வழிகளின் ஆற்று நீர் மற்றும் கழிவுநீர் கலக்கும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து மாதிரிகளை வாரியம், 1991–ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சேகரித்து பகுப்பாய்வு செய்து வருகிறது.

குறிப்பிட்ட ஆதாரம் இல்லாத மாசு உருவாக்கம் குறித்த விழிப்புணர்வினை வாரியம் உருவாக்கி வருகிறது. இதில் இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தினால் ஏற்படும் மாசு ஒரு பெரிய காரணமாகும். இரசாயன பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்கள் ஆகியவற்றின் குறைந்த பயன்பாட்டின் மூலம் அதிக அளவு சுற்றுச்சூழலுக்கு உகந்த

உயிரக விவசாயத்திற்கு மாறுவது அவசியம் என வாரியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு எடுத்துக்காட்டுகிறது.

### 4.18. கழிவுகள் மேலாண்மை

#### 4.18.1. அபாயகரமான பொருட்கள் மேலாண்மை

அபாயகரமான இரசாயனப் பொருட்களைக் கையாளுதல் மற்றும் நிர்வகித்தல், அபாயகரமான கழிவுகளை சுத்திகரித்து சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் ஆகியவற்றில் வாரியம் சிறந்த வழிவகைகளைக் கையாண்டு வருகிறது. வாரியம், 2000 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1989-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின் கீழ், 2,318 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்/அமைப்புகளை கண்டறிந்து செயலில் உள்ள அமைப்புகளில் அபாயகரமான கழிவுகளின் வகைப்பாட்டினையும் கண்டறிந்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், பொது அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றத்திற்கான அமைப்பினை தனியார் நிறுவனத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்காக, தொழிற்சாலை கழிவு மேலாண்மை கூட்டமைப்பினை உருவாக்கி உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, மேலக்கோட்டையூர் கிராமத்திலுள்ள ஓர் இடம் இத்தகைய அமைப்பினை ஏற்படுத்த கண்டறியப்பட்டுள்ளது.

வாரியத்தின் அறிவுரையின்படி, பொது அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியினை ஏற்படுத்துவதற்காக திருப்பூரில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தாலுக்கா, நெல்லூர் கிராமம், கருப்பகவுண்டர்பாளையத்தில் ஒரு இடத்தை கண்டறிந்துள்ளது. கரூர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, சாயப்பட்டறை கழிவுநீர் சுத்திகரிப்பிலிருந்து வெளியேறும் கழிவு சேற்றினை பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியின் மூலமாக வெளியேற்ற கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, மாதகிரி கிராமத்தில் ஒரு இடத்தினை கண்டறிந்துள்ளது.

உகந்த இடங்களில் ஒரு சில பாதுகாப்பான திடக்கழிவுகளை நிலத்தடியில் நிரப்பும் வசதிகள், அந்நிலையங்கள் உரியமுறையில் கண்காணிக்கப்படுவதனையும் அதன் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் சீரியமுறையில் மேலாண்மை செய்யப்படுவதனையும் உறுதி செய்யும் வகையில் உருவாக்குவதில் வாரியம் முனைந்துள்ளது.

செய்முறை சுழற்சி அல்லது கச்சாப்பொருளாக மறுபயன்பாடு மற்றும் மறு உபயோகமாகும் பொருட்களை மீட்பு செய்தபின் கசடுகளை வெளியேற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கி

அபாயகரமான கழிவுகளை சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்ய, 2000-ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) திருத்தப்பட்ட விதிகள், வழிவகை செய்கின்றன. தமிழ்நாட்டில், கழிவு எண்ணெ மற்றும் உபயோகிக்கப்பட்ட மின்கலன்களிலிருந்து பெறப்பட்ட காரீயம் ஆகியன சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்களில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன.
உற்பத்தியாளர்கள் மற்றும் ஏலதாரர்களிடமும் கட்டுப்பாட்டினை வாரியம் ஏற்படுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் வைத்திருப்பவர் மட்டுமே இத்தகைய கழிவுகளை கையாள அனுமதிக்கப்படுகின்றனர்.

வாரியம், 25 அபாயகரமான இராசாயன பொருட்களை சேமிக்கும் தனிப்பட்ட சேமிப்பு கிடங்குகளையும் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பினால் 1991-ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதி சட்டத்தின் கீழ் 73 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன. 1997-1998-ஆம் ஆண்டில், அபாயகரமான பொருட்கள் மேலாண்மை பிரிவிற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாரிய நிதியின் மூலம் ரூபாய் 12.60 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003-ஆம் ஆண்டில் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் அபாயகரமான பொருட்கள் மேலாண்மை திட்டத்திற்காக ரூபாய் 41.95 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

### 4.18.2. நகர திடக்கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக்கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப்பகுதிகளில் விஞ்ஞான பூர்வமாக திடக்கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. இதுகுறித்து தமிழகத்தில் சுற்றுலா மற்றும் யாத்திரிகத் தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் மற்றும் குற்றாலம் ஆகிய பகுதிகளுக்கான நகர திடக்கழிவுகள் மேலாண்மைக்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்தளிக்கும் திட்டத்தினை வாரியம் தனது நிதியிலிருந்து ரூபாய் 23.60 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது. திருப்பூர் நகராட்சி, கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுக்க துவங்கியுள்ளது. பிரித்தெடுக்கப்பட்ட உயிரகக் கழிவுகளை தனியார் நிறுவனமொன்று கடந்த இரண்டு வருடங்களாக உரமாக்கி வருகிறது. இதுவரை 92 நகராட்சிகளில் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுத்து உரமாக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. நகர திடக்கழிவுகளை உரமாக்குவதற்காக 32 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு வாரியம் தடையில்லா சான்றிதழ் வழங்கியுள்ளது.

ஆகஸ்ட் 2001-இல் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும், டிசம்பர் 2001-இல் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும், மீண்டும் ஆகஸ்ட் 2002-இல் நகராட்சி ஆணையர்களுக்கும் நகர திடக்கழிவு மேலாண்மைக்கான

செயல் முறை கருத்தரங்கம் நடத்தப்பட்டது. நவம்பர், 2002-இல் நகராட்சி ஆணையர்களுக்கு, '**ஒரே மையத்தில் இல்லாத நகர கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நகர திடக்கழிவுகள் மேலாண்மைக்கு நுண்ணுயிர் மீத்தேனாக்கம் ஒரு தொழிற்நுட்ப வழிமுறை**' என்ற கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மாவட்டங்களில் குப்பையே இல்லாத நிலை ஏற்பட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2002-2003 மற்றும் 2003-2004-ஆம் ஆண்டுகளில் நகர திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தனித்தனியாக பிரித்தல் பற்றிய 26 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 6,160 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்டன.

### 4.18.3. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உணர்ந்து, தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன் பாட்டினை குறைக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கிற்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்களை பயன்படுத்துவது சம்பந்தமாக ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 03.08.2001 அன்று துவக்கி வைக்கப்பட்டது. மாவட்ட அளவிலான, '**பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்**'- எனும் திட்டம் செப்டம்பர் 2001-இல் துவக்கி வைக்கப்பட்டது. வீசியெறியப் படும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சிகளை அவர்தம் மாவட்டங்களில் நடத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர்களுக்கும் தலா ரூபாய் 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்குகளின் பயன்பாடு மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் சென்னை மாநகர பேருந்துகளில் பொருத்தப்பட்டன. நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் பிற சுற்றுலா நகரங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. திருவண்ணாமலை கோயிலின் கிரிவலப்பாதையை உபயோகிக்கும் பக்தர்களுக்காக தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டம், ஒகேனக்கல், கன்னியாகுமரி, கொடைக்கானல், ஊட்டி, இராமேஸ்வரம், வால்பாறை, ஏலகிரி, ஏற்காடு, திருமூர்த்தி நீர்வீழ்ச்சி முதலிய பகுதிகள் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் அற்ற மாவட்டம்/ நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுய உதவி தொழில் முனைவோர்கட்கு, கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் சேலம், வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேசிய/மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் பிற மாவட்டச் சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் பிற மாசுபடுத்தும் செயல்கள் இல்லாதவையாக உருவாக்கும் வகையில் தூய்மைப்படுத்தும் பணி அரசு அளவில்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டில் ஒரு தூய பயணம் மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

### 4.18.4. மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை

2000-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை வாரியம் செயல்படுத்துகிறது. அதன்படி வாரியம் 317 அரசு மருத்துவமனைகளையும் 1,835 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவ சங்கத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும் இடம் கண்டறியவும் மருத்துவ கழிவுகளை கையாள பொது அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிய கால நடவடிக்கையினை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன. தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கான பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளை ஏற்படுத்த 10 இடங்கள் இந்திய மருத்துவ சங்கத்தினரால் கண்டறியப்பட்டுள்ளன. பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பில், ஆட்டோகிளேவ், துண்டுகளாக்கும் கருவி, அழுத்தும் கருவி, உடல் கழிவுகளுக்கான எரிப்பான், பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதி, ஆய்வகம் மற்றும் கழிவுகள் போக்குவரத்திற்கான வாகனங்கள் ஆகியன அடங்கியுள்ளன. அரசாங்க மருத்துவ மனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகளுக்காக, தனியான வசதிகள் 6 மாநகராட்சிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. சிறிய நகரங்களில் உள்ள மருத்துவ மனைகள் அவ்விடத்திலேயே, ஆட்டோகிளேவ் மற்றும் நிலத்தில் புதைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். வாரியம், மருத்துவ கழிவுகளை கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய மருத்துவ சங்க உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், தென்மேல்பாக்கம் கிராமம் மற்றும் சென்னாக்குப்பம் கிராமத்தில் பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. வேலூர் மாவட்டம், கண்டிப்பெடு கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி கிராமத்தில் பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகளின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

## 4.19. வாரியத்தின் பிற பணிகள்

### 4.19.1. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, வாரியம், சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் மாசு தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாடு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம், தனது நீர் மேல்வரி நிதியிலிருந்து

ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகின்றது. நிதி உதவிக்கு உகந்த கருத்துருக்களை ஆராயவும் தெரிவு செய்யவும் ஒரு குழுவினை வாரியம் அமைத்துள்ளது. இதுவரை ரூபாய் 45.38 இலட்சம் மதிப்பில் 9 திட்டங்களுக்கு வாரியம் அனுமதியளித்துள்ளது.

### 4.19.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

தொழிற்சாலை பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித்துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள் மாசு தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து தொழிற்சாலைகளுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுபடுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் வாரியம் அமைத்துள்ளது. டிசம்பர் 1995-ஆம் மாதத்திலிருந்து 31.03.2004 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 185 பயிற்சிகளையும், 7,946 நபர்களுக்கு பயிற்சியினையும் அளித்துள்ளது.

நீர் மற்றும் காற்று சட்டங்களின் அம்சங்களின்படி, நீர் மற்றும் காற்று மாசினை தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது களைதல் ஆகியவற்றிற்கான பயிற்சியினை வழங்குவது மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பணிகளில் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பயிற்சி மையம், பயிற்சிக்கு தேவையான பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளுக்கான செலவினங்களுக்கு மட்டும் பங்கேற்பாளர்களிடமிருந்து பயிற்சி கட்டணத்தை பெறுகிறது. ஏப்ரல் 1997-லிருந்து மார்ச் 2004 வரை பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட இத்தகைய வருமானம் ரூபாய் 51.27 இலட்சம் ஆகும்.

### 4.19.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப திடலில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கம், சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடத்துகின்றது. சுற்றுச்சூழல் தொடர்பான ஒளிக்காட்சிகள் மற்றும் சிறு படங்களும் திரையிடப் படுகின்றன. மேலும், வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், வாகனப்புகை மாசு தடுப்பு, ஒலி மாசு தடுப்பு, அபாயகரமான கழிவு மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை, மருத்துவ நுண்ணுயிர்க் கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, ஓசோன் மண்டல பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு முதலியவை தொடர்பான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக்காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வு பிரசாரங்கள் நடத்தப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் பெருமளவு வெற்றியடைந்துள்ளன. குடியிருப்புப்பகுதிகள் மாசு அற்றதாக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் குடியிருப்பு பகுதியில் அனுமதிக்கப்பட்ட

நடவடிக்கைகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுச்சூழல் குறித்த விஷயங்களில் பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளருக்கும் தலா ரூபாய் 1 இலட்சம் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### 4.20. திட்டப் பணிகள்

#### 4.20.1. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்

வாரியம், சென்னை நகருக்கான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தயாரித்து, இறுதி செய்வதற்காக மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பியுள்ளது. திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மாற்றியமைக்கப்பட்ட வரையரையின்படி மாவட்ட சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிப்பதற்காக வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் நில அளவீடு மூலம் சுற்றுச்சூழலுக்காக திட்டமிடும் பணியினை செயல்படுத்தி வருகிறது.

#### 4.20.2. அயல்நாட்டு உதவி திட்டங்கள்

வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல்தொழிற்சாலைகளின் கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்வதற்கான சாத்தியக் கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் வாரியம், 24.11.2000 அன்று ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு 1,80,100 அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வு முடிக்கப்பட்டு, அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினரால் நியமிக்கப்பட்டுள்ள அமைப்பிடமிருந்து இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

#### 4.20.3. பசுமை விருதுகள்

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினை தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு பசுமை விருதுகளை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் அவர்களது தனி முயற்சியாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசு தடுப்பு பணிகளுக்காக 2001-2002 ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகள் நீலகிரி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் மற்றும் 2002-2003ஆம் ஆண்டிற்கான பசுமை விருதுகள் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ராமனாதபுரம், சேலம், திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் வழங்கப்பட்டன. இவ்விருதுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05.06.2002 மற்றும் 05.06.2003 அன்று வழங்கப்பட்டன. மாவட்டங்களில் சுற்றுச்சூழல்

குறித்த பிரச்சனைகள் மீது மாவட்ட ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த இவ்விருதுகள் தூண்டுகோலாக இருந்தது.

"**புதுமை படைப்போருக்கான பசுமை விருது**" அரசால் 2003-ஆம் ஆண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. துணிசாயத் தொழிற்சாலையில் ஏற்படும் முக்கிய தொழில் மாசு பிரச்சனைகளை களைவதில் புதுமை படைத்த ஒரு தொழிற்சாலைக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

**ஆர். வைத்திலிங்கம்,**
**வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்**